# யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணைப் பரீட்சை - 2015
## சைவநெறி

| தரம் :- 7 | சுட்டெண்:- ........................................... | நேரம்:- 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**(01) பின்வரும் வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01) திருச்சிராப்பள்ளிக் குன்றுடைய இறைவனின் பெயர் என்ன?
1) பசுபதி 2) சிவலிங்கம் 3) தாயுமானவர் 4) வைத்தீஸ்வரன்

02) பாடசாலையில் கொண்டாடப்படும் சமயவிழா
1) பரிசுத்தினம் 2) நவராத்திரி 3) தமிழ்த்தினம் 4) ஆசிரியர்தினம்

03) சைவசமயிகளுக்கு வாரத்தில் முக்கியமான நாள்
1) வெள்ளி 2) வியாழன் 3) திங்கள் 4) ஞாயிறு

04) மாத விரதம்
1) ஆனி உத்தரம் 2) கேதாரகௌரி விரதம்
3) வரலட்சுமி விரதம் 4) விநாயகர்சஷ்டி விரதம்

05) அத்திவாரத்திற்கு அடிக்கல் நாட்டும் போது தேவையானது
1) வெண்கலம் 2) நவதானியம் 3) மஞ்சள் 4) இளநீர்

**(02) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 01) சம்பந்தர் | கிரியை |
| 02) மனையடிசாஸ்திரம் | பஞ்சபுராணங்களில் ஒன்று |
| 03) நல்லொழுக்கம் | சீர்காழி |
| 04) குங்குலியக் கலயர் | ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் |
| 05) பெரியபுராணம் | புதுவீடு கட்டுதல் |

**(03) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✕) எனவும் அடையாளமிடுக.**

01) புதுமனை புகுதல் கிருகப் பிரவேசம் எனவும் அழைக்கப்படும். ( )
02) வெள்ளிக்கிழமை விரதம் முருகனுக்குரிய விரதமாகும். ( )
03) மன்னிக்கும் பண்பு உயர்வானது. ( )
04) மெய்யடியார்களின் வரலாற்றை கூறும் நூல் கந்த புராணம் ஆகும். ( )
05) ஒழுக்க விதிகளுள் நேரந்தவறாமை முக்கியமானதல்ல. ( )

**(04) கீழே தரப்பட்டுள்ள சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

01) மூதாட்டி இறைவனுக்கு .................................... கட்டிக் கொடுத்து வந்தார்.
02) முருகப் பெருமான் உதித்த தினம் ............................................. ஆகும்.
03) ......................... ஒரு புறாவாக உருமாறினார்.
04) கிருகப் பிரவேசத்தின் போது ................................ எடுத்துச் செல்லப்படும்.
05) .......................... போற்றும் உயர் பண்புள்ளவர்களாக நாம் வாழ்தல் வேண்டும்.

(20 × 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

➢ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) பின்வரும் பாடல்களுள் இரண்டினை எழுதி பாடியவர் பெயரையும் தருக.

i) "நிரைகழலரவம்.........."

ii) "விருதுகுன்றமா....."

iii) "மாதர் பிறைக்கன்னி....."

iv) "நங்கடம்பனை......" (20 புள்ளிகள்)

02)

i) விரதம் என்றால் என்ன? (3 புள்ளிகள்)

ii) நாள் விரதங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

iii) வரலட்சுமி விரதம் அனுட்டிப்பதற்கான காரணம் யாது? (3 புள்ளிகள்)

iv) விநாயகர் சதுர்த்தி எப்போது கொண்டாடப்படுகின்றது? (2 புள்ளிகள்)

03)

i) வாழ்வியல் நற்பண்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

ii) மனுநீதி கண்ட சோழனின் கதை உமக்கு எதனை உணர்த்துகின்றது? (3 புள்ளிகள்)

iii) பஞ்சமா பாதகங்கள் எவை? (3 புள்ளிகள்)

04)

i) புதுமனைப் புகுதலின் மறுபெயர்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii) புதுமனைப் புகுதலின் போது வீட்டினுள்ளே கொண்டு செல்லும் பொருட்கள் ஆறு தருக. (3 புள்ளிகள்)

iii) புதுமனை புகுதலில் அத்திவாரம் இடுவதற்கு பயன்படுத்தும் பொருட்கள் எவை? (3 புள்ளிகள்)

iv) புதுமனை புகுவிழா சடங்குமுறை செய்வதால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

05)

i) மெய்யடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல் எது? (2 புள்ளிகள்)

ii) கலயர் என்பவருக்கு குங்கிலியக்கலயர் எனப் பெயர் வரக் காரணம் யாது? (2 புள்ளிகள்)

iii) குங்கிலியக்கலியரின் குடும்பம் வறுமையால் வாடியதன் காரணம் யாது? (3 புள்ளிகள்)

iv) குங்கிலியக்கலிய நாயனாரின் கதை மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட படிப்பினை யாது? (3 புள்ளிகள்)

06) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i) பஞ்சமா பாதகங்கள்

ii) விரதங்கள்

iii) புதுமனை புகுவிழா

iv) ஆலய வழிபாடு (10 புள்ளிகள்)



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page